Registered at the G. P. O. AS A NEWSPAPER

சற்சமார்க்கபோதினி

[SANMARKA POTHINI]

பத்திரவிலைவிதம்
ஒருகுரூபா உ-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ரூ0
இந்தியாவுக்குசதம் ரூ0
பிரதேசங்களுக்கு எடு

விளம்பரவிலைவிதம்
வரி ஒன்றுக்குசதம் க0
0 க்குமேற்றுவரிக்கு க
0 க்குமேல்..... அ
இனைப்பிரகர மொவ்வெ
ன்றிற்கும்உ-ல் ஒன்று

ஒன்றுவிட்டொரு புதன்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்

Published on every other Wednesday

VOL. XXXIV. JAFFNA OCTOBER 23th 1918. No. 21

நசம் புத்தகம். யாழ்ப்பாணம் ककउ ஐப்பசிமீ உகஉ புதன்கிழமை. சங்கியை உக

LIBRARY
1995
UNIVERSITY OF JAFFNA

In Loving Memory of
VICTORIA SELLAM.
(Beloved wife of S. M. Alfred of The Orient Co., Ltd. and daughter of Dr. G W. A. Supramaniam.)
Died 5th August 1918.

S leep on dearest take your rest
Lay down your head upon your Saviour's breast
I loved you well but Jesus loved you best.

Inserted by her affectionate husband.

நம்நுபத்திரிகை

நவீன தொற்றுச்சுரமிமித்தம் வேலைகா ர் வாரமையாலும் நாமும் அதன் சூழலி கப்பட்டு ஒன்றுஞ்செய்ய இயலாதிருந்த [illegible] காரணம் அகப்படாமையாலும் அப்படி லும் எண்மடங்கு விலையேறின்மையாலு ம் நம்பத்திரிகை காலதாமதமாய் வெளி வருகிறது. இனிமேலும் இவ்வித தடைநே ரிடாது முன்னெச்சரிக்கையா யிருக்கவே ண்டின் போதிய பணம்வேண்டும். ஆதலா ல் இதுவரையில் நம்பத்திரியத்தையனு ப்பாதோர் தயைசெய்துநம்மேற்றயவுவை த்துப்பத்திரிசியத்தைத்தந்து தீர்க்கும்ப டி கேட்டுக்கொள்ளுகிறோம். இத்தருண மே உதவிசெய்யவேண்டியதருணம் என் பதை மறக்கப்படாது.

நவீன தொற்றுச் சுரம்.

பெருந்தடிமல்போன்றமுன்வந்துலாவி யசுரம்தற்போது இந்தியா இலங்கையெங்க ளும்வியாபித்துப் பலரைப் பலியெடுப்ப தைக்கண்டஞ்சுகிறோம். இதற்குக்கொத்தம ல்லிசேர்ந்த சிறுகுடிநீரன்றிவேறொன்றுங் கொடுக்கப்படாதென முன் பலரின் அபிப் பிராயமிருந்தது. அது கடினமானசுரத்து க்குப் போதியதல்ல; தக்க அவுடதஞ்செ ய்யவேண்டுமென்று தற்கால நடபடியால் நன்குவிளங்குகிறது. முதல் குடிநீருடனே யே தொடங்கவேண்டும். குடிநீர்வகையும் இடத்துக்கிடம் வித்தியாசமாயிருக்கிறது. சிலர் கறுவாவுந் தேயிலையுஞ்சேர்ந்த கஷா யத்தைப் பாவிக்கவேண்டுமென்றும், சிலர் தோற்றுக்குணங்கண்டவுடனே மலசுத்தி செய்து குயினயின் பாவிக்கவேண்டுமென் றும், சிலர் உள்ளி கறுவா தேயிலைசெர்த் தமல்லிக் கஷாயம் பாவிக்கவேண்டுமென் றும், சிலர் உள்ளி மிளகுக் கஷாயஞ்செய் து சீனிசேர்த்துச் சாப்பாட்டின்பின் உட் கொள்ளவேண்டுமென்றுஞ் சொல்லுகிறா கள். இது தோன்றினால் வெளிவரப்படா து. குளிர்படக்கூடாது. குளிர்பிடித்தால் கபவாத சுரமுண்டாய் மரணத்துக்கேது வாக்கிவிடுகிறது.

சென்னையில் பிரபல அங்கிலோவைத்தி யர் புதியசுரத்தைக்குறித்து எழுதுவது;— ஒருவருக்குச் சுரங்கண்டவுடன் "ஆஸ்பரி ன்" என்றமருந்தைப் பெரும்பாலான வைத் திநர் கொடுக்கிறார்கள். அதனால் சுரம்அ திகரிக்கிறது. அது இரத்தவுறப்பதிப் பை களுக்குக்கெடுதலையுண்டுபண்ணுகிறது. ஆ ரம்பத்தில் அதைக்கொடுத்தால் கபவாதசு ரத்தில் சொன்னவொருவிடுகிறது. பம்பாய் ஆஸ்பலாயமல் கம்பனியில் அகப்படக்கூ டிய "டோஸ்மெட்ரிக்இரீனிடி" "டபர்லெ ஸண்ட்" என்ற மாத்திரைகளைவாக்கி ஆ ரம்பத்திற்கொடுக்கவேண்டும். மலசுத்தியா கமருந்துகொடுத்தபின் பனிக்கட்டிபோ ட்ட சலத்தை ஒரு பஞ்சுத்திரணையால் உ டம்பெங்கும் ஒத்திடங்கொடுக்கவேண்டும். அதனால் சுரவேகம் தணியும். அதன்பின் கபவாத சுரம்வந்தால் "கிரியோஸோட்" என்றமருந்தைத் தினம் ஈலைக்குதடவை 20 அல்லது 30 துளி பாலிலிட்டுஉட்கொ ள்ளவேண்டும். சுரம்விட்டு ஐந்தாறு நாட்கள்வரையும் கோயாளி வெளிவரவும் வேலைசெய்யவுங்கூடாது என்பதே.

சென்னைச் சுகாதாரஉத்தியோகஸ்தர் டா க்டர் சே. ராகவேந்திரராவ்தெரிவிப்பது;— முதல் சென்னையில் சென்ற ஆடிமாசத்தில் இச்சுரம்வந்தும் இவ்வளவு கெடுதிசெய்ய வில்லை. இன்புளுஎன்சா மிக அபாயகரமா னவியாதி. இது தொற்றுவியாதி. வெகு சீக்கிரத்தில் பரவுகிறது. இது சீக்கிரத்தில் வெளியிற்றெரிந்துவிடுகிறது. முதலில் சுர ம்காணும். அத்துடன் குளிரும் இருமலும் உண்டாம். சளங்களை மிகவாட்டிப் பலவீ னப்படுத்துகிறது; அல்லது கடுமையானத லையிடியையும் உடம்பு உளைவையும் உண் டாக்கி மனிதனை விதந்துவிடுகிறது. ஆரம் பத்தில் லாக்தியும் உண்டாகக்கூடும். ஆரம் பத்தில் தக்க அவுஷதங்கொடுத்தால் சுர வேகந் தணியக்கூடும். சிலருக்குச் சுவாசா சயரோயும் இரத்தவாந்தியுமுண்டாய் வி யாதிஸ்தர் 24 மணிமுதல் 36 மணிநேரத் துளிறந்துவிடுகின்றனர். இந்தவியாதிக்கு அவுஷதங்கொடுக்கக்கூடாதென்று சனங்க ளினைப்பது தவறு. ஆரம்பத்தில் சரியா ன அவுஷதப்பிரயோகமில்லாமல் பலர் மா ண்டுவிடுகிறார்கள். இச்சுரத்துக்கு வைத்தி யரைக்கொண்டே சிகிச்சைசெய்யவேண்டு ம். இதற்குச் சரியான அவுஷதமின்னதெ ன்று சரியாய்த்தெரியாவிடினும் குயினயி ன், சோடியம்சாலிசைலேட், ஆஸ்பரின் இவைகளை வைத்தியரின் ஆலோசனையின் படி கிரமப்படிபிரயோகித்தால் குணமுண் டாகுமென்று தெரிகிறது. இச்சுரத்தாற் பி டிக்கப்பட்டவர்கள் போதியகாலம் ஆறுத லாயிருக்கவேண்டும். சீக்கிரம் வேலைக்குப் போகப்படாது. இச்சுரத்தால் பிடிக்கப்ப ட்டவர்களை காற்றோட்டமான அறையிலி ருக்க விடவேண்டும். அங்கே கோயாளிக் குவேண்டிய காரியங்களைச்செய்ய இரண் டொருவர்தான் இருக்கவேண்டும். அவர்க ளின் மலசலம் எச்சில் முதலியவைகளைக் கார்பலிக்அசிற்றலத்த நீரிலாவது சுடுநீரிலா வது ஏத்தவேண்டும். சுரம் முழுதும் விடு கிறவரையில் கோயாளி படுக்கையிலேயே இருக்கவேண்டும். நமது சாக்கிரதையால் சுரம்வராமற் காக்கலாம். கூத்துகள் கூட் டங்கள் சளசந்தடியான இடங்களுக்குச் சனங்கள் போகப்படாது. சுரம் இருமல் உள்ளவர்களுடனுங் கலக்கப்படாது. ஒரு வீட்டில் ஒருவருக்குச்சுரங்கண்டால் அது வீட்டிலுள்ள யாவருக்கும் பரவாமல் சா க்கிரதையாயிருக்கவேண்டும். வியாதிஸ்த ர்களால் உபயோகிக்கப்பட்டபாத்திரங்கள் முதலியவைகளை மற்றோர் பாவிக்கக்கூடா து என்கிறார்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேதவைத்த T. R. நாராயணன் D. M. P. சொல்வது;—இச்சுரங்காணும்போது தலைக்கனப்பு ம் பின்பு தலைவலியும் வாய்கசப்பும் வாந் தியும் அடிக்கடி வெளுத்த உமிழ்நீர்துப்புத லும் கைகால் தடை நோவும் சரீரங்கறு த்தல் மந்தரக்கினி வயிற்றின் வலப்பக்கத் தில் ஸ்தம்பிதல் அடிக்கடி இருமலும் ம லபந்தமும் குளிருங்காணுகிறது. சிலருக் குப் பிதற்றலுண்டாகிறது. இதற்கு விஷ் ஜுரோந்தி கிலவேம்பு கக்கு நிற்பலி வெ ண்மிளகு இவைகளில் வகைக்குப் பலம் அரைக்கால்வீதம் எடுத்து இடித்துக் கஷா யஞ்செய்து கொஞ்சம்இந்துப்புப்போட்டு நாள் மூன்றுமுறை குடித்துவரின் இக்கோ ய்தீரும். இப்படி 200 பேருக்குமேலே எ ன்னாற் பரிகரிப்பட்டிருக்கிறார்களென்கிறார். (இவர்கூற்றுக்கிசைய, இல்விடத்தில்யரித்த ஒ ருவருக்குத் தடையில் தண்டலிக்கயிருந்து பி ரிவு அல்விடம் கறுத்துப்போனதாய்த் தெரிந்த து. ஆதலால் வரும் வியாதியெல்லாம் ஒரேதன் மையான தல்லவென்று விளங்குகிறது.)

சங்காரிதர்க்கம் யூனியன் அக்கிராசனர் வி. டி. ராமசாமி நியாயதுரந்தரர்கூறுவது; பம்பாய்ச்சுரம்வாராமல்தடுப்பதெப்படி?

வியாதியஸ்தர்களிடம் போகும்போது சாக்கிரதையாக இருக்கவேண்டும். கைகா ல்களை வெந்நீரில்கழுவித் துடைத்துக்கொ ள்ளவும். மலங்கட்டில்லாமல் தினமும் மல த்தைக்கழித்துவர ஏற்பாடுசெய்துகொள்ள வும். இன்றைக்குச் செய்யவேண்டியதை நாளைவரையில் நிறுத்திவையாதே. மந்தப் பட்டு வியாதியில்விழாமல் பார்த்துக்கொ ள்ளவும். பொடாஷியம் பேர்மான்கனட் கலந்த சலத்தில் வாய்கொப்பளிக்கவும்.

இந்த விஷசுரம் ஒருவனுக்கு வருவதற் குமுன்னாயே காய்ச்சல் தலைவலி இடுப் பு கைகால்களின் வலி இருமல் சளிமுதலி னவரும். சிலசமயத்தில் அரேணபேதியு ம் வாந்தியுங்கூடவருதலுண்டு. இவைகளை விஷசுரத்தின் அறிகுறியெனத் தெரிந்து கொள்ளவேண்டியது.

காய்ச்சல்கண்டதும் செய்யவேண்டிய சிகிச்சைகள் என்ன?

காற்றுஓட்டமும் வெளிச்சமுமுள்ள ஒ ருஅறையில் நல்லபடுக்கையில் கோயாளி யைக்கிடத்தி உடனே வைத்தியஞ் செய்ய வும். தாமதவாத்திலாவது கூடத்திலாவது கோயாளியைக்கிடத்திவைத்தல் மிகவும்நல் லது. சன்னல்களையுங் கதவுகளையுந் திறந்து வைக்கவும். அறையில் சத்தம்செய்தல் கூ டாது. வியாதிஸ்தனுடைய தேகத்தின்மே ல் காற்றுப் படாமலடிக்கக்கூடாது. ஆத லால் வியாதிஸ்தனைப் போர்வைகளால் சு த்தமான துப்பட்டிகளால் நன்றாய்ப் போ ர்த்திமூடவும். அறையில் கோயாளிமாத்தி ரம் தனியாக இருப்பதே நல்லது. மற்றவ ர்கள் அந்தஅறையில் அனுவசியமாக வருத ல்கூடாது. பலர்வரின் விஷசுரம் தொற்றிக் கொள்ளும். வியாதியஸ்தனுக்கு நோய்அகி லரித்துக் கபவாதசுரமும்வரும். அப்போ து பிரானனுக்கே ஆபத்துநேரிடும்.

வீட்டிலுள்ளார் கவனிக்கவேண்டிய விஷயம் என்ன?

காய்ச்சல்வந்த மனிதனைக் கவனிப்பவர் கள்தவிர மற்றவர்கள் அங்குபோவது பி சகு. வீட்டிலுள்ளாரெல்லோருஞ் சுலபமா ய் எக்குவிடைக்கக்கூடிய பொடாஷியம் பெர்மான்கனேட் கட்டி ஒன்று இரண்டுங் கலந்தகண்ணீர்கொண்டு வாய்கொப்பளிக் கவும்.

கபசுரத்தினால்வருந்தும் கோயாளிகளுக்கு என்னசிகிச்சை செய்வது?

வியாதியஸ்தனின் மார்பின்மேல் தர்ப் பண்டைன் அல்லது கற்பூரதைலத்தை நன்று கத்தடவவும். தவிட்டினால் ஒத்திடங்கொ டுக்கவும். தினத்திற்கு 4, 5 தடவை ஒருமு ளிகோம் இப்படிச் சிகிச்சைசெய்தால் கப ம்உடையும், இரத்தகாசத்திற்குரியகெடுதி நேரிடாது. கோயாளியும் நிச்சயம் பிழை ப்பான்.

கோயாளிக்குக் கொடுக்கவேண்டிய ஆகாரம் என்ன?

கல்ல புழுக்கலரிசியினால் இரண்டுதரம் வேகவைத்துத் தெளிவாய்த் தயாரிக்கப் பட்ட கஞ்சியை நன்றாய்க்காயவிட்டுக்கொ டுக்கவும். வேறு எந்தஆகாரமுங் கொடுக் கக்கூடாது.

கோயாளி கவனிக்கவேண்டிய சில முக்கியவிஷயங்கள்.

காய்ச்சல்நின்றபிறகும் சிலதினங்களுக் குக் காற்றுவேலைசுரம்படி வெளியில் போகக்கூடாது. கோடு கச்சேரிமுதலான நெருக்கடியான இடங்களுக்குப் போவதை முழுதும் நிறுத்தவும். கூத்து சர்க்கஸ் முத லான வினோத காட்சியைப் பார்க்கப்போ வதுகூடாது. ஏனெனறால் கும்பலானஇ டங்களில் வியாதியஸ்தரிருந்தால் வியாதி தொற்றி விஷமிக்கும் என்பதுபற்றியே.

இலங்கைவைத்தியத்தலைவர்சொல்வது;— விசேஷமாய் இது ஓர் தொற்றுநோய். நோ யாளரின் இருமல் துப்பல் சுவாசம் வெய் ர்வை சலம் மலம் இவைகளிலிருந்து பர் ந்துலாவும் கிருமிகளே இந்நோய் உண்டா வதற்கு விசேஷகாரணம். இலங்கையிலேயு ஞ் சிலமாசங்களாக உலகத்தின் சிலவிட ங்களிலும் பரந்துலாவும் இதனைப் பம்பா யச்சுரமென்றுசொல்லுதல் சரியன்று. இந் நோய் தொற்றியவுடன் குளிரணுகாவண் ணம் [illegible] வெளியேசெல்லா து சாக்கிரதையாகுகல் அந்த சீதோஷ்ணத்தில் சுகமாகும். அப்படிக் கவனமின்றியிருந் தில் கவாதநோயுண்டாய் மரணம் சம்பவி க்கவுங்கூடும். சுவாதம் உண்டுபடாமலிரு ப்பதற்குத் தேகத்தை நன்றாய்முடிச் சு டாய்வைத்துக்கொள்ளவேண்டும். நோயா ளியிருக்கும் அறையில் சுத்தமான காற்று அவசாந்தேவை. அதற்கு யன்னல் கதவு எல்லாந் திறந்துவிடவேண்டிய து. ஆனால் நோயாளி காற்றுக்கு எதிரே படுக்கப்படா து. வெயர்வையுண்டுபடின் அதனைத்துடை த்துப் புதுவஸ்திரங்களால் மூடிக்கொள்ள வேண்டும்.

இந்நோயை மாற்றும் வழிவகைகள்.

மற்றும் சுரங்களைப்போல் இதனையுங் கவ னியாதிருக்கப்படாது. காய்ச்சல்வந்து மா றியபின்னும் கவலையீனத்தினால் தோற்று கின்றது. நோய்கண்டவுடனே மூன்றுநா ள்வரையிலும் காய்ச்சல் மாறினபின்னும் இருமல்மாறும்வரையும் வெளியேசெல்லப் படாது. தடிமன் இருமல்முதலிய குணங் களிருக்கின் குளிர்ந்தசலத்தில் குளிப்பு மு ழுக்குச் செய்யப்படாது. நோயாளியின் துப்பல்முதலியவற்றை ஓர் பாத்திரத்தில் ட்டுக் காற்றினால் வெளிகொள்ளாதபடி ஆ ழிய குழியில்போட்டு மூடவேண்டும். அ ல்லது ஒரு சீலைத்துணியிலெடுத்து எரித்து ப்போடவேண்டும். நோயாளியைப் பர் மரியபவரன்றி மற்றையோர் அந்நோயா ளியிருக்கும் அறைக்குப் போகப்படாது. தேவையெனக் காணும்போது நோயாளிக் கு ஒருநாளைக்கு ஒருவிசை வயிற்றுப்போ க மருந்துகொடுப்பது நன்று என்கிறார்.

இச்சுரத்துக்குப் பம்பாய்வாசிகள் பூக்கி லிப்தல் தைலத்தைப் பிரயோகித்து வரு கின்றிருக்கிறார்கள். இது நல்லமருந்தென் றும் இதைச் சரீரமெங்கும்பூசித் தேய்த்தா ல் குத்து உளைவு நோ வெயர்வையைக்கண் டிக்குமென்றும் முதல்நாள் இரண்டுமுறை தேய்த்து இரண்டாம்நாள் கொதிநீரில்வி ட்டுப்பிரயோகிக்கவேண்டுமென்றும் இது கர்ற்றுலாவாதஇடத்தில்செய்து பின்னுங் காற்றுப்படாமல் காக்கவேண்டுமென்றும் ஒருகுரண்டி சீனியில் 5 துளி தைலம்விட் டருந்தினால் இருமல்தீருமென்றும் படுக்கை யறையில் இத்தைலத்தைத் தெளித்தால் நோய் விரைவில் அமருவதற்கு பிறகில் தாவாது காத்தற்கும் நல்லமுறையென்றும் தெரிவிக்கிறார்கள். இத்தைலத்தின் குணம் விசேஷித்ததென்றுபிற்காலத்திற்கணடுபிடி.

க்கப்பட்டுப் பலபுகையமருந்துகளிற்சேர்க்கி றார்களென்றுகண்டு நாம் நமது "பதார்த்த சாரதத்தில்" தெரிவித்தபடி இச்சுரத்திற்கு ம் நாம் பாலித்து இதற்குமுன்னரே சித்தி பெற்றிருக்கிறோம். நம் பதார்த்தசாரத்தி ல சொல்லியிருப்பதாவது:—

"ஊராலிப்டி என்னெய்.

இது தென்னிந்தியாவில் சீலகிரிமலையில் உண் டாகும் யூகலிப்டஸ் கிளோபியுலஸ் அட்டாலினு என்ற மரங்களின் இலைகளிலிருந்து வடித்தெடுக் கும் எண்ணெய். இம்மரங்கள் 300-350 அடி உ யரமிருக்கும். இது வெண்மஞ்சள்நிறமாயும் பரிம ளமாயும் கர்பூரவாசனையாயுமிருக்கும், காரமாயி ருக்கும். இது சுரரோகத்தைநிறுத்தும். இது முறை காய்ச்சலிரீக்கும். நாற்றங்களையகற்றி தொற் றுவியாதிகளிலிக்கும். வலிமுதலியவலிகளைப் போ க்கும். தேகமுதலியவற்றைத் தடுக்கும். மத்தம் ஏற் மலைச்சுருக்கச்செய்யும். போட்டஇடத்தில் வரி ச்சலியுண்டாக்கும். மார்புச்சளியாதல் ணம் காட் பட்ட இருமல் கடுகாரோகம் சுவாசகாசம் மூச்சி ரக்குண்டிகாய்ரோகம் இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். இடோபாரத்துடன்லக்ஷ்ண தர்மம் கிஷுவிரணத்துக்குப்போடலாம், முகாலாம். பிர மேகத்துக்கு சிர்த்தானவிலி பிச்சலாம். காயம் விர ணம் முதலியவைகளுக்கு வெளிப்பிரயோகஞ் செ ய்யலாம். இதை 1 முதல் 4 துளிவரை சலத்தி லாவது சீனியிலாவது விட்டுக்கொடுக்கலாம். ஒரு இரும்தல் வாசிதானுடன் அரைஅவுன்சு தைலம் சேர்த்து கோயாளியிருக்குமிடத்தில் தெளித்தால் கெட்ட காற்றைக்கிட்டி பரிகத்தமாக்கும். கோ ய்க்குகாரணமான ரெமிகளைக்கொல்லும். சுத்தி வெட்டுக்காயம் தீச்சட்புண் காயுள்ளவருக்கு பின் வை புரையோடும்விரணம் தீர்க்கும். குக்கலுருப் முதலென்பு கெஞ்சுக்குழியில இத் தைலத்தைத் தேய்த்தத் தொண்டையிலும் தேய்க்கலாம். வாய்வு சம்பந்தமான பல்லவிக்கும் பல்லீறற்றில தேய்த்து முகத்தில் கோயுள்ளஇடத்திலுந் தேய்க்கவும். சல வெட்டுக்காயம் தீச்சட்புண் காயுள்ளவருக்கு பின் வை புரையோடும்விரணம் தீர்க்கும். குக்கலுருப் முதலென்பு கெஞ்சுக்குழியில இத் தைலத்தைத் தேய்த்தத் தொண்டையிலும் தேய்க்கலாம். வாய்வு சம்பந்தமான பல்லவிக்கும் பல்லீறற்றில தேய்த்து முகத்தில் கோயுள்ளஇடத்திலுந் தேய்க்கவும். சல வெட்டுக்காயம் தீச்சட்புண் காயுள்ளவருக்கு பின் வை புரையோடும்விரணம் தீர்க்கும். ஒற்றை தலைவலிக்கு கோயுள்ளஇடத்தில் பூசித் தேய்க்க லாம். தூய்மு தொளு மூட்டை இதனவாசனைக் கலுகாது. காதுநிழலுறுதலுக்கு ஒருதுளி சாலை மாலை வாதில்விட்டவே இரண்டுகாளிற குணமாம். தேன்கொட்டினால் வடிகாயிற்றேய்க்கக்குணமாம்."

Maleria Mediea

பதார்த்தசாரம்.

இது சுதேச அங்கிள ஔஷதி பதார்த்த சாரங்களிலிருந்து திரட்டப்பட்டு யாவருக்கும் உபயோகமாகும்படி பிரசுரிக்கப்பட்டது. ஒவ்வொரு வைத்தியருக்கும் ஒரு பதார்த்தருக்கும் இன்றியமையாதது. இதனால் தங்கு சுதந்தைத் தாமேகாத்துக்கொள்ளலாம். விலை ரூபா 1 க்கு 50 தபாற்செலவு வேறு. இதைஒவ்வியிலிருந்தாசாலையிற் பெறலாக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்.

ஊர்ச்சி—"ஐப்பசிமாசம் எப்பெர்ப்பட்ட குளமும் நிரம்பும்" என்ற முதுமொழி இவ்வருடம் பொய்த்துப்போயிற்று. மழையின்மையால் பலஇடங்கள் இன்னும் விரைப்புகடக்கவில்லை. "அரிவாளுமாடக் குடுவையுமாடும்" என்றபடி நம்மூர்நெல்லால் சிலமாசங்களுக்காவது சனங்கள் நீவிப்பாம் இம்முறை கூடாமற்போமென்றுகம்புகிறோம். அவ்வவ்விடங்களில் விளைவுக்தானியங்களை அவ்வவ்விடங்களில் பத்திரப்படுத்திக்கொள்வதால் புறவூரு கம்பிச்ஞிக்கும் நம்பாடு இவ்வருடங்கஷ்டமில்லையில்வந்திருக்கிறது. ஆதலால் குளம் கிணறுகளால் நீர்பாய்ச்சுவது உணவுப்பொருட்செய்கைகளை நம்மூரில் அதிகரிப்பிக்கலாகுமென்பது. தற்கால கவினகரம் மழையாவிடிலை. ஆதலால் ஓரவர்க்கொருவர் உதவிசெய்வதுக் கூடாமலிருக்கிறது. இதனால் மரணங்கள் கேரிடுகிறது. ஆதலால் உணவு உடை சுகம் முதலிய எல்லாவகையாலும் சனங்கள் மிக வருந்துகின்றனர்.

நிருவிகப்பொருட்காட்சி—இவ்விதபொருட்காட்சி கம் யாழ்ப்பாணத்தில் ஒருபோதும் நடந்ததில்லை. சிலவருஷக்களின்முன் இவ்விதக் காட்சிநடத்த எல்லாஆயத்தமுஞ் செய்யபின் நடுத்தவிடப்பட்டது. இலங்கையில் இவ்வருடங்களில் வேறு எட்டிடங்களில் நடைபெறாநிருக்கின்றன. இன்னும் இரண்டு மூன்றிடங்களில் நடைபெறவிருக்கிறது. ஆயின் நமமுயற்சியநிகரித்த யாழ்ப்பாணத்திலமாத்திரம் இவ்வரையில் இம்முயற்சியைக் கவனியாதிருந்தது துக்கமானகாரியம். ஆனால் தற்போது சனசங்கரேவைச்சங்கத்தார் இவ்விடத்திலும் அவ்வாறே காட்சிகொட்டை முயற்சிசெய்கிறார்களென்றறிகிறோம். மற்றிடங்களைப்போலக் தலைமைகளார் இதில் கவனஞ்செலுத்தினால் நகரு நடைபெறும். அரசாட்சியார் ஆக்கிரகத்துள் இந்தியகானாயசங்கத்தாரைக் காட்சியை ஒழுங்குபடுத்தக்கத்தக்கவிடத்தாரான. செலவுக்கும் 750 ரூபா கொடுத்தார்கள். இன்னும் 500 ரூபா கொடுத்தால் காட்சிகளைப் பெருப்பிக்கவும் இருக்கிறார்கள். ஆதலால் முன்போல எடுத்தவடிப்பைக் கைவிடாமல் ஒவ்வோர்வருடமும் இவ்விதகாட்சி நடைபெறுமெனக் காத்திருக்கிறோம்.

வண. வால்ஸ்வாமியாரின் தேகவியோகம்—நெடுந்தீவுக் கட்டளைக்குருவாயிருந்த இவரும்சுற்கால நவின சுரவாய்ப்பட்டு யாழ்ப்பாணம் வருகையில் 17வ கடலிலே நோவியோகமானாரென்று அறிந்து மிக மநாம்வருந்தினோம். இவர் தாழ்கமபிறந்தினேகம் தேவபத்தி கேர்மையாதியவைகளிற் சிறந்தவர். இவரநபிரேநாமயாமுப்பாணம் கொண்டுவரப்பட்டு மறுநாள் கண்ணியமான முமதானஞ் செய்யப்பட்டது.

விறதர் மறுவேல் அவர்களின் தேகவியோகம்—இவரும் நவின சுரவாய்ப்பட்டு 11வ தேகவியோகமானார். இவர் கத்தோலிக்கமிஷன் பொக்கிஷகாரனும் நற்குணநற்செய்கை புடையருமாயிருந்தவர். இவர்க்காய்த் துயருறுபவருடனே நம்மனுதாபமுமிருகிறது.

மெல், சி. யோன் சங்கரப்பிள்ளை—28 வருஷம் வலிகாமம் வடக்கு திஸ்ஸறாயிருந்தவிவரும் தமது 78ம் பராயத்தில் சென்ற 13வ சனிக்கிழமை தேகவியோகமானார். இவர் கொழும்புத்துறைப் பேரதனுகக்கி வித்தியாசாலை, செயின் பத்திரிசியார்கல்லூரி, குருமடம் முதலியவைகளில் தமிழ்படிப்பித்தாரும் கிலகாலம் "புதகாவலி" பத்திராதிபராயும் இருந்து கீர்த்திபெற்றவர். இவர் மல்லாகத்தில் இராசநாயகமுதலியார் வழித்தோன்றல். தெல்லிப்பழை கனகராயமுதலியார் பூலோகசிங்கமுதலியார் விசுவநாதமுதலியார் வழி சத்துகுந்த அரிவையை மணந்து ஓர் புத்திரருக்கும் மூன்று புத்திரிகளுக்குக் தக்கதாயனவர். புத்திரன் அகாலத்தே பரமபதமடைந்துவிட்டார். இவரது மரபினர் மல்லாகம் புளுனலிக்கட்டுவன் ஆகியஇடங்களில் நற்கிர்த்தியுடன் வசிகின்றனர். இவர்க்காய்த் துயருறும் புத்திரிகள் மருகர் ஆதிய மற்றும் இனசனநினைதிருடன் நாமுமொருவராய் மனம்வருந்துகிறோம்.

தேகவியோகம்—யாழ்ப்பாணத்தில் காணப்பட்டிவு கவகோரல் ஞானரூராயருந் பிரான்சிஸ் முதலியாரும் சென்ற 8வ நவினசுரத்தாற் பீடிக்கப்பட்டுத் தேகவியோகமானார். இவர் நெடுங்காலம் பிரமானிக்கமான அரசாட்சிப்பணிவிடைகாரனுயிருந்து விளங்கியவர். இவர்க்காய்த் துயருறுபவருடனே நம்மனுதாபமுமிருக்கிறது.

வேறுமோர்மரணம்—மானிப்பாய் நொத்தாரிஸ் மெல், சி. முருகேசர் அவர்களின் பவத்திரனும் மெல், பொன்னையா ராசருபரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற மிகற்றர் மெல், S. T. ஆனல்ட் அவர்களின் மருகருமான மெல், சான்ல் இராசரூரியர் தம் 29ம் பராயத்தில் சிங்கப்பூரில் சென்ற 13வ தேகவியோகமானார். இவர்க்காய்வருந்தும் இளமனைவியுடனும் பிள்ளைகளுடனும் மற்றும் இனசனருடனும் நாமுமொருவராய் மனம்வருந்துகிறோம்.

கனம் ஏன். எதிராசா—நம்கண்பருமாம் பத்திராமானியுமான இவரும் யாணமெனுந்தினியான மகறவலுருன்றை திருகு மிரத்துக்கத்தோம், இவர் கலசாலையிலிருக்கும்போதே நம்பத்திரிகையை வெகுவாய் அபிமானித்தவர். இவர் கருப்பத்திரிகாபிமானம் இல்லிலேயிருந்தது அகாலமுதாணமாய் அவர் வட்டுக் கோட்டையிலவலிக்கறும்போதே 1855 ம் (ஹு) ஆவணியீ 8வ யம் பத்திரிகைக்கு எழுதிய கடிதமொன்றை இதன்கீழ்த் தருகிறோம்.

"ஐயா! தமது போதினியின் அபிமானிகளுள் யானுமொருவன். சுயநலக்கருதாது உலகோபகாரமாகப் பிரசுரிக்கப்படுவரும் லாரிக பதரிகைகளில் எனக்கு இயல்பிலேயே அதிகவாருப்பம். எனினும் பத்திரிகைகளுக்குப் பணஉதவிசெய்து அவைகளைத் தயரியப்படுத்த வெறுமை முழுமிமாட்டாதானறபோல, என்னுல் இயலவே. பணமிடிமையால வருந்தி "தாரகை அமரன்" கொழும்பாயுமெனக் கிடந்தவேளையில் தாயாருக்காக நான் அனுதாபப்பட்டு அவளுடைய சினேகிதர் பலரிடத்திற் பலமுறைபோய்க் கொடுக்கவேண்டியபணத்தில் கொஞ்சப்பங்கையாவிலு மிவ்வேளை கொடுத்து உதவுவதுக் இயாக்களே என்று திரிந்தும் கடைசியில் முழங்கைகாட்டிப் போட்டனர். சிறுதள்ளி பெருவெள்ளம் என்னும் பழமொழியைநினைந்து, இந்நேரம் கைவசமிருந்த... ...ரூபாயை இரண்டாக்கிப் பாதியைப் பெரியகாயர் தாரகையம்மாளுக்கும் மற்றப்பாதியைச் சிறியதாயாருக்கென கோக்கு இந்தட னனுப்புகிறேன். பத்திரிகைக்குப் பணங்கொடுக்க வேண்டியவர்கள் ஒரேமுறையில் முழுத் தொகையையுங் கொடாவிடினும் பாகம்பாகமாயாகுல் கொடுப்பார்களாயின் பத்திரிகைகள் பழுதடையாவே. தமது பத்திரிகைக்கு நன்கொடையாகவும் கைபொப்பமாகவும் பணங்கொடுத்தோர்பெயர்களைத் தமது பத்திரிகையில் வரித்தவெழுது ஹிதியாயார் செருக்குறுவாளென்று நானும் நினைத்தேன்" என்று எழுதியனுப்பினர். இவர்க்குத் "தொட்டிவித்தூண்டகுணம் கடலிமட்டும்" என்றபடி நம்பத்திராபிமானம் அவரில்லிலத்துக் கோலாலம்புருக்குப் போதசராயப்போனபின்னும் பலகடிதங்களெழுதி நம்மைத்தெரியப்படுத்தினவர். கொஞ்சங்காற்று அதிகந்தெரியுமென்று பேசு வெளிவரும் பதடிகள் போன்றவரல்ல. தம்நிலைக்கு மாறுபினும் உண்மையை உண்மையென் றெப்புக்கொள்பவர், உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேசுபவரல்ல, இவர் சென்றவருடத்தில் யாழ்ப்பாணம்வந்து போனபொழுது நம்மையும் மறந்துவிடாமல் வேறோர் குரவருடன்சேர்ந்துவந்து நம்மைத் தரிசித்து அன்புபாராட்டிப் போனவர். இவரதுமரணம் மெய்யாகவே எமமனதை வாட்டிவிட்டது.

பரிதாபமரணம்.

தொண்டமானுற்றில் பிரபல்ய வியாபாரியாரும் பெருந் தனவந்தருமான ஸ்ரீ சின்னத்தம்பி வீரகத்திப்பிள்ளையின் இரண்டாம்புத்திரியும் கோலாலம்பூரில் செல்லிறிற்றிலுயிரில் வீக்ளெர்காக இருக்கும் ஸ்ரீ V. சுப்பையாவினதும் சிங்கப்பூரில் மெடிக்கல் டிப்பாட்மென்றில் டாக்குதர் உத்தியோகத்தியிருக்கும் ஸ்ரீ V. துரைசாமி என்பவரினதும் சகோதரியும் சிங்கப்பூர்ப்பகுதியில் போஸ்மாஸ்தராக உத்தியோகம்பார்த்துப் பின் ரீடியாலம் Klang Postmaster ஆகிருந்து தற்காலம் பென்சனுக்கு தமதுசொன்னசேமம்வந்திருக்கும் ஸ்ரீ வி, இராமசாமிப்பிள்ளை என்பவருக்குப் பெருமகளுமாகிய ஸ்ரீமதி முத்தாச்சிப்பிள்ளை சென்ற சனிக்கிழமை 4 மணிவரையில் அரோக ரோய்காரணமாகத் தேகவியோகமானார். இவ்வுத்தமஸ்திரி நற்குண நற்செய்கைகளிலும் மஸ்வாபதியிலுஞ்சிறந்தவ. இவருக்கு இறக்கும்போது வயசு 23. இவ்வுத்தமியைவிட்டு தனியும் பெற்றோரேடும் சகோதரனுடும் தமதுசொன்னசேமம்வந்திருக்கும் ஸ்ரீ வி, இராமசாமிப்பிள்ளை என்பவருக்கு சகோதரிகளோடும் ஏனைய சுற்றமித்திரரோடும் நம்மனுதாபமுமிருக்கிறது. (சடி)

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உபுவிஷமே (யூரிக் ஆஸிட் பாய்சன்) காரணம். தூய்மையமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து நீங்குதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:—முதுகுநோய், துக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்பேதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், சலரோகு; தைரியமில்லாமை, கண் பார்வையின் மந்தம், தலைக்கற்று, கில்களும், சதைகளும் புண்ணுகி அரைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், பிழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், நிமிர்வாயு, மலோகரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாகச்சொன்னிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்ஸ் டீ ஸ்ரீ பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுவியும் மூத்திரப்பை ரோகமாத்திரமல்ல, மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது தடுத்தால், சரீரசுகம் தப்பாமல் உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்ஸ் ஸ்ரீ பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரமல்ல.



ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. .. . 10 8 0

இவை, சீமை மருந்து லியாபிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஹண்ட் அண்டப்பிளிடி, ஏச். நல்லர் துரையவரிடத்திலும் கிடைக்கும்.

இலங்கை.

நமதுதேசாதிபதிஇவர் கண்டி குருநாகல் அநுராசபுரம் திரிகோணமலையைத் தரிசித்து ஒவ்வோரிடங்களிலும்கடந்த உபசாரணைகளை அங்கேநிகழ்ந்து வாசிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்குத் தக்க பதில் கூறினர்.

யுத்த தந்தி.

Summarised
From the Madras "Hindu Nesan"
and "Swadesamitran"

பிரான்சு பெல்சிய யுத்தம்.

27வ ஜர்மியபடைகள் 6 மைல் முன்சென்று பலஇடங்கள் கைப்பற்றின. இருதினங்களில் பிரான்சியசேனைமத்திரம் பதினுயிரம்பேருக்கிக மாய்க் கொலைபடுத்தன. கிரனன பெருட்களையுங் கைப்பற்றின.

அமரிக்கசேனைகள் 7 மைல்முன்சென்று ஸாரேன்னல் முதலிய பலகரங்களைக்கைப்பற்றின. இதுவரையில ஜயாயிரம்பேர்வரையில் அமரிக்கர் கைப்பட்டனர். நூறபிரங்கிகளையும் பலஅரண்பீரங்கிகளையும் நூற்றுக்கணக்கான மெஷின்பிரங்கிகளையும் 125 உத்தியோகமதுட்ட 8000 பேருக்கதிகமான போர்வீரரையும் அமரிக்கர் கைப்பற்றினர்.

28வ பதினுயிரவருக்கு மேற்பட்டோரைச் சிறைபிடித்தி 200 க்கு அதிகமான பீரங்கிகளையும் அங்கிலேயர் கைப்பற்றினர்.

கிரென்கோட் ஆதியஇடங்களும் பிடிபட்டன. காம்பிரேடைரோகச்சென்ற அங்கிலேயபடை ஆறுயிரம்பேரையும் பலபீரங்கிகளையுங்கைப்பற்றின.

செயின்குவண்டினுக்குத்தெற்கில் இரவில் செர்மனியர் வெகுபலமாய் எதிர்த்துத்தாக்கியும் பிரான்சிய பீரங்கிப்படை தெறத்திதுவிட்டது. வடக்கில் 29வ பிரிதானியபடைள் ராலைவிரம் பேரைச்சிறைபிடித்தன. சத்தருக்கள மிகுபிடிவாதத்துடன் போராடினர்.

30வ பிரித்தானிய பெல்சியசேனைகள் டிக்ஸ்மூட் ஜான் டொலட் லடான்பர்க் மூன்லட், கோங்கனேக் கைப்பற்றின. 28ம் 29ந்திகதியில் 9000 பேரையும் 280 பீரங்கிகளையுங்கிடித்தனர்.

ஆடிமீ 18வ முதல் மேற்கரங்கத்தில் 2 லட்சம் நிரையவரும் 8000 பீரங்கிகளும் 20000 மெஷின்பீரங்கிகளும் சத்தருக்களிடமிருந்து பிடிக்கப்பட்டன.

1வ ஸ்லாசில் என்றஇடத்தைப்பிடித்த முன்சென்ற வெண்பேல்என்றஇடத்தையும் பிரித்தானியசேனை கைப்பற்றின.

30வ கனடர்சேனை 4000 பேரைச்சிறைபிடித்தன. சத்தருக்கள் காம்பிரேகருக்குத் தீவைத்துவிட்டனர். பிரான்சிசேனைகள் செயின்குவண்டினுக்கு வடக்கில்.

சீனைசெயாரேவ்; ஆர்மண்டயன் வெண் ஆதியஇடங்களைச் செர்மனியர்விட்டுப் பின்னடைந்தனர். சென்ற ராஜகுடக்னாய்ப்பிடித்த எல்லாஇடங்களையுங்விடச் செர்மனியர் பின்னிடுகின்றனர்.

7வ செயின் குவண்டினுக்கு வடக்கில்கடந்த போரினுல் நிமன்கோட் டில்லோ முதலிய இடங்களைப் பிரான்சர் கைப்பற்றினர்.

பிரசே செயின்வடக்குப் என்றஇடங்களைப் பிரித்தானியர் கைப்பற்றினர்.

லோன்சாம் பிடிபடுகிறது. செயின்குவண்டினுக்கு வடகிழக்கில் 24 மணிநேரத்தில் 7000க்கு அதிமான சுதையாளரைப்பிடித்தோம். ஆர்டன்பிரசையில் சத்தருக்கள் பலமாயெதிர்த்து டினியயகைப்பற்றியும் நாம் தரைதிருப்பிப்பிடித்துவிட்டோம். 100 பேரையுக்கைபிடித்தோம். பிரான்சியபடைள் ஆர்டனதியை கடக்கிற்து தம்மன்கோட் பெரியுக ஆதியஇடங்களையும் போர்கோட்டையுங் கைப்பற்றின.

ஸிம்கிரபேலில் அமரிக்கபடைகளெதிர்த்துச் சத்தருக்கள் கடும்போர்செய்தனர். எல்லைப் போர்முனையிலும் பிரகிசசண்டை நடைபெறாமலிருக்கிறது.

கார்ரோஸ் என்ற பெயர்பெற்ற பிரான்சியவிமானி தவறிப்போனார்.

சாம்பேர்க்கும் செயின்குவண்டினுக்குமிடையிலுள்ள போர்முனையில செர்மனியர் பின்வாங்கினர். பிரித்தானியபடைகள் சாம்பிரேயைக் கைப்பற்றின. 10000 பேருக்கதிகமானவர்களையுஞ்சிறைபிடித்தினர். 21வ ஆகப்பின 40 வயல்முன்னேறின. 2 உக்குப்பின 110000 சத்தருக்களை சிறைபிடித்தி 358 பீரங்கிகளும் பிடிக்கப்பட்டன. அவைக சத்தருக்கள் கொலைப்பட்டும் காயப்பட்டும்போயினர்.

அலனன் ரிஷு செயின்மாட்கன் ஆதிய இடங்களையும் அங்கிலேயர் கைப்பற்றினர். லென்சுக்குத் தெகிலும் முன்சென்று ரோம்ராய் என்றபடத்தை கைப்பற்றினர்.

சத்தருக்கள் கேமாய்ப் பின்வாங்குகின்றனர்.

செர்மனியர் பின்னிக்கொரு பிரித்தானியவிமானங்கள்சென்று தாகின. ஆயாதநிற்கமையான சலடைடகட்டது. 21 செர்மன்விமானங்கள் விழ்த்தப்பட்டும் 9 கேறப்பட்டுத்தப்பிப்போயின. 9 பிரித்தானியவிமானங்கள் தவறிப்போயின.

காம்பிரேயில் பிரித்தானியர்ப் பேரித்தபோது நாம் சேரபடுத்தப்பட்டமலருக்தனைக்கண்டு வியப்புற்றனர்.

9வ காலை 10 மணிகுச் செர்மனியர் பலதிடங்களில் புதைத்தவிட்டுப்போன வெடிகுண்டுகள் வெடிக்க ஆரம்பித்தது. அக்காரத்தத் தேவாலயமும் மற்றப் புராதன ஸ்தலங்களும் நிர்த்துவிராயின, பலஉருக்களில் வியத்தகுவிர்த்தன. சுற்று அதிகிரக்கத் 8 பலவிதொடங்கிற்று. வெடிவிபத்துக்கள் இன்னும் கேர்ந்தொண்டிருக்கின்றன.

தற்போது மான்கோட் ஜர்மியபடைள்சமி

[illegible]கிறது. அல்லாது அணியரிகை ஆமபித்தர் ராம்பிரர்கு வ[illegible]கையச்சென்று பிரூனிஸ்வரமிற் செல்லுகிறது.

சாலமன்ஸ்வாக்கு ஆருகில் பிரித்தானிய ஸ்தலங்கள் சுவாதீனத்தில் சத்துருமொட்டார்ப்படைகள் கெருமலாய்த்தாக்கியுந் திருபியடித்துவிட்டனர்.

டோன்கருக்கு வடக்கிலும் எய்சன்ரதிக்கரையிலும் சேர்மனியர் பூமி அணியரிகையை ஸ்தாபித்துக்கொண்டார்களாம். மிகு நெருக்டியான நிலைமையிலிருந்து சேர்மன்படைகள் சமாதீனியமாய்த் தப்பிப்போய்விட்டார்களாம். சத்துருக்களுக்கு இன்னாற்றிகொடாமல் அடிமேலடியடிகப்பட்டுகொண்டார்.

14உ ஐக்கியசேனைகள் பெல்லெத்தில்வலுவிற்றுக்கத்தொடங்கியிருக்கின்றன. காலை 8 மணிவரையில் 3000 யார் முன்னேறிவிட்டனர். 600 பேர் சிறைபிடிக்கப்பட்டனர். மான்கிரூப்பையும் பிரான்ஸ் கைப்பற்றினர்.

போட்டுக்கு வடக்கே சத்துருக்கள் அதிகசேனைகளை வைத்திருந்த இடங்களோக்கி அணிக்கர்சென்று அவர்களை யெரித்துக் குமேல் ரோமேல் என்னுமிடங்களுக்கும் அப்பாற்சென்றனர். சென்ச்ரஜல் லாண்டை என்னுமிடங்களைப் பிரித்சென்று 170 பேரைக் கைபிடித்தனர்.

சேர்மனியர் அமிக்கோர்முனையைப் பிரங்கிகளால் கடுமையாய்த் தாக்குகிறார். இருகுகியாருக் ஆபிய அதிகாய்ப்பரிவிர்ரிகிறார். யுத்திரவியாற்றுகிறார். பிரான்பின் நீ சேர்மனியரை முறியடித்தது.

17உ [illegible]ன்னுக்கு வடமெழுக்காம் முன்செல்ல கடட்டாம்.செல்லையும் நிரானடு ப்ரெக்குக்கு லேப்கம்மாயுள்ள பிரதேசங்களையும் தாவாரிதாமகதையும் பிரான்ஸ் கைப்பற்றினர்.

பேர்முனேமுமுறும் பெல்லியர் முன்சென்று கொண்டேயிருக்கிறார்கள். ஸ்கர்பேர் என்னுமிடத்தில் ஏகர் கதியைதாண்டி ஸ்கர்பக்கமாய் முன்சென்றுகொண்டேயிருக்கிறார்கள். சேலுபன்னேப்பிரதேச ப்ரேல்பாஸ் தொடரைட் என்னுமிடங்களை ஐக்கியபடைகள் கறிவளைந்து கொண்டிருக்கிறார்கள். பிரான்சியசேனைகள் ர்த காலையடைந்துவிட்டவிடைப்பிடித்துக்கஸ்ஸ்காட் கற்றப்பிரதேசங்களைப் பிடித்தார்கள். ஆர்டாய்லாசபர்க்கில் உட்புகுந்து ஆரோ கணிகளைப் பிடித்தார்கள். எதிரிகள் வண்ச்சர் லாப்பின் இவைகளின்மேல் குண்டுகள் பிரயோகித்தார்கள்.

பெல்லியசேனைகள் டிஸ்மூட் ஸ்ட என்னுமிடங்களுக்குமத்தியில் வலுபிரதாகிய இந்தச் சேனைகள் 6 கிலோமீற்றர் முன்சென்றிருக்கிறார்கள். பிரித்தானியசேனைகள் மீரங்கிபைக்கடந்து மெனிஹுக்கு அப்பால் ஆகக் கிலோமீற்றர்கள் முன்சென்றன. பெல்லியர் தொலைரைட்டையும் பிரான்ஸ் லிச்சேல்டையும் ஆலோபையும் பிடித்தார்கள். பிரித்தானியர் மெனினுக்கைப்பற்றிக் கூட்டாயிய உட்புகுந்தனர். சேர்மனியசேனைகள் [illegible] செய்யப்பட்டன.

15உ சேர்மனியர் லேலிஸ் என்ற முக்கியமான பிரதேசத்தைவிட்டுப்பின்சென்றிருக்கிறார்கள். சத்துருக்களெதிரிற்று மெலில் உட்புகுந்து ஆரோ கைதிகளைப் பிடித்தார்கள். ஜெனரல் பர்ட்டுடன் ஏழாம் 5 யிற ராஜும் சத்துருக்களத்தரிகி லலியப்பிடித்தது.

பெல்லியர் லைரத்தாண்டி கிழுபோர்ட்டுக்குரல் ஆர்ன்பக்கமாய் முன்சென்றுகொண்டிருக்கிறார். மிகு லவல்லரையில் ராஜர் பிரஸ்ஸலவுக்கு எதிரான பின்வாகுவதாய்த்தெரிகிறது.

பிரான்சும் பெல்லியரும் 11உ முதல் தாக்கிக்கொண்டிருந்தது 18உ முடிவுசெயமாய் முடிந்தது. பிரான்டஸ்லேன்முழுதும் சத்துருக்கள் துரத்தப்பட்டு ஒடிக்கொண்டிருக்கிறார்கள். பெல்லியர் எதிர்கொள்ளத்தரக்கொண்ட ஈசரைத் தான்ஜுனுக்கள். பிரித்தானியர் ஆஸ்ரென்றுக்குட் புகுந்தார்கள்.

லிலிதெருமுழுதும் பிரித்தானியர் தப்பட்டதாரையடித்துக்கொண்டே உட்புகுந்தாரவும் சத்துருக்களைத் தரத்திக்கொண்டு போகிறதாகவுந் தெரிகிறது. சத்துருக்கள் முன்யோசனையுடனும் ஒழுங்காயும் பின்காட்டியோடுவதாய்த் தெரிய வருகிறது.

19உ ஐக்கியசேனைகள் உவாசிக்கினியையுமற்றி போவியையும் கைப்பற்றிப் பாரோனுக்குள் புகுந்தனர். 1200 பேர் கைதிகளாயினர். சத்துருக்கள் பலமாயெதிர்த்தும் பின்னர்ப்பட்டனர். பெல்லியர் ஆலோன் என்னுமிடத்தை ஆக்கிரமித்துக்குமியடியினுள் கால்வாயைப் பலஇடங்களிற் றாண்டியிட்டனர்.

21உ பேர்பிரசையும் கெலிஸறையும் கைப்பற்றி பிரஷேசைத்தாக்கினர். பெல்லியர் சென்றகாலமாயைக்கடந்து அப்பாற்சென்றனர். இவணி ஒன்றாற்றப் பிரதேசத்தையுமுடியது. பிரித்தானிய 2உ பட்டாளம் கூற்றிறுப்பகுதிற்கிட்ட 52 லோமீற்றர் தூரத்திற்கப்பால் முன்சென்றனர். தெறிக்கு கூற்றிறுப்பேனைத் தெருவுக்குவந்தன. பிளான்டேலில் 51 கிலோமீற்றர் தூரம்இதுவரையில் முன்சென்றிருக்கின்றனர். சில வாய்களுக்கு வலக்கரையில் சத்துருக்களைப் பின்னிட்டச்செய்து பலகிராமங்களையும் 5000 பேரையும் கைப்பற்றினர்.

நுருக்கு.

பலஸ்தீனில் பிரித்தானியரின்செயம்.

கொமறி 23உவரையில் 25000 மதிபற்றாரையும் 260 பீரங்கிகளையும் பிரித்தானியர் கைப்பற்றினர்.

23உ செப்பிரிலிருந்து வாடிப்ரர்வரையில் 6 மைல்தூரமுள்ள தெருவிலுந் துருக்கியர்கள் சேதமுற்றன. ஆயிரக்கணக்கான வண்டிகளும் நூற்றுக்கணக்கான மோட்டார்வண்டிகளும் [illegible]னையும் பொருட்களுங் கைப்பற்றப்பட்டன, துருக்கியர்கள் குயிருதடுக்கின்றனர். அங்கிலோ படை 26 மணிநேரத்தில் 24 மைலமுன்னேறின.

26உ துருக்கியபடைப்பலத்தில் காலிலொரு பங்கு சேதமாயின. அம்மானவரைப் பிரித்தானிய தூதுவீரர் கைப்பற்றினர். துருக்கியரிலில்லாட மாரவகர்களுக்குத் தப்பிப்போகக்கூடும், மற்றோர் டெட்கிக்டலோரக்கிற் தெற்கே பின்செல்லுகின்றனர்.

டமாஸ்கஸ்வாசம் ஆஸ்திரேலிய குதிரைப்படைகளால் பிடிக்கப்பட்டது. செச்சால் அரசின்படைகளும் உதவியாயிருந்தன. 7000 பேர் சிறைப்படுத்தப்பட்டனர்.

ஐக்கியதேசங்களுடன் தான் சமாதானமாகத் தீர்மானித்தாய்த் துருக்கி சேர்மனிக்குத் தெரிவித்தது. அதற்குச் சேர்மனி தான் பல்கேரியாவை மறமடி கைப்பற்றுவது நிச்சயமென்று தைரியங்கூறியிருக்கிறது.

பலஸ்தீனில் சொறல் அல்லன்பி அடைந்தசெயம் ஒப்பற்றதெனப் புகழப்படுகிறது 60000 துருக்கர் சிறைபிடிக்கப்பட்டனர். 350 பீரங்கிகள் கைப்பற்றப்பட்டன. இரு சேர்மனியபடைத் தலைவர் ஒடிக்கப்பிவிட்டனர். முன் தலைகு பிடிபட்டது. பிரான்பியர் பேருட்டையும்பிடித்தனர். அலப்போவும் பிடிபட்டால் ரொசேப்பொத்தாமியாவைக்குறித்துக் கலைகொள்ளத்தேவையில்லை. மெர்ஜுதேசாநிபதியும் ஐக்கியஅரசருக்குசாரப்பட்டிருக்கிறார். கொன்ஸதாந்திநோபிளைக் போக்குவரவுசெய்வதைநிறுத்தச் சேர்மனியர் பல்கேரியவுக்குப் பெரியசேனை ஒன்றைவனுப்பமுயற்சிசெய்கிறார்கள். துருக்கர் அவருகியை எதிர்பார்த் திருக்கின்றனர் துருக்கியிலிருந்து சோபியாவழியாய் ஆஸ்திரியாவுக்குப்போகும் புகைரதப்பாதையிற் செல்லும் ஒவ்வொரு புகைவண்டித்தொடரிலும் சேர்மனியபிரசைகள் நிறைந்திருகின்றனர்.

துருக்க மந்திரசபையார் தம்வேலையை விட்டுவிட்டார்கள்.

பிரான்சிய பிரித்தானியரப்பல்கள் பேஸ்ரூட்துறைமுகத்தில் 6உ பிரவேசித்தன. பிரவேசித்த போது நகரம் சத்துருக்களால் காலிசெய்யப்பட்டிருந்தன. நகரக்கள் கல்லாவேற்றனர். இதுவரையில பிரித்தானியர்சமம் சிறைப்பட்ட துருக்கர் 75000 பேர். பலஸ்தீனிலிருந்து 75000 துருக்கர் தப்பிப்போயினர்.

துருக்கஅரசாட்சியில் என்னர்பாஷாவும் லாட்பாஷாவும் தங்கள் உத்தியோகங்களை ராசிநாமாக்கொடுத்துவிட்டனர். டியூக்பாஷா சிரேட்டமந்திரியானார். இவர் முன் லண்டனில் துருக்கிஸ்தானுபதியாயிருந்தவர். இவர் ஐக்கியஅரசுகளின்கீழ் சமயாராட்டுவர்.

துருக்கி ஐக்கியஅரசுகளுடன் தனிச்சமாதானஞ்செய்ய கருதுவதாய் ஆஸ்திரியாவுக்கு அறிவித்தது. பிரசாதபதி விலஸனுக்குச் சேர்மனியனுப்பிய பதிலின் முடிவு தெரிவரையில் அப்படிச் செய்யக்கூடாதென்று ஆஸ்திரியா தருக்கியை வேண்டிக்கொண்டது. துருக்கி அதற்குப் பதிலனுப்பவில்லை.

துருக்கஅரசாட்சியார் சண்டையை நிறுத்தும்

பிரசாதிபதி விலஸன் தைமீ 8உ யிலும் புட்டாரிமீ 20உ யிலுஞ்சொன்ன ஏற்பாடுகளுக்கு தாம் இணங்குவதாயும் சண்டையை உடனே நிறுத்தும்படியும் துருக்கி பிரசாதிபதி விலஸனிடம் கேட்டிருக்கிறது.

17உ பிரான்சீயிலிருந்து கொன்ஸ்தாந்திநோபிளுக்குச் சேர்மனிய உத்தியோகஸ்தர்களுடைய ஆளுகையிலிருக்கப்பட்ட 20 போர்க்கப்பல்களும் கேரியமாதிரித் துருக்கியுங் கீழ்படியாதிருக்கும்பொருட்டு அனுப்பப்பட்டிருப்பதாய்த் தெரிய வருகிறது.

கடற்கலகம்.

30உ ஒரு பிரித்தானிய டொர்பிடோக்கப்பல் வேறொரு கப்பலுடன்மோதி முழுகிப்போயிற்று. 53 பேர் காணாமற்போயினர்.

ஆஸ்திரியாவின் நாரசா துறைமுகத்திலிருந்த இரண்டு ஆஸ்திரியப்பல்களை அமிக்க ஜனவெடிப்படுகுகை ஆழ்த்திவிட்டன.

சென்ற 3உ புருட் என்றகப்பல் வேறொருகப்பலுடன் மோதி முழுகிவிட்டது. 47 பேர் மீட்கப்பட்டனர்.

ஆஸ்திரேலியிருந்து இங்கிலாந்துக்குவந்தபுருவ என்னும் பிரித்தானியகப்பல் முழுகடிக்கப்பட்டது. அதிலிருந்த 170 பேர்முதல் 200 பேர்வரையில் உயிரிழந்தனர்.

20உ டம்பா என்ற அமிக்கப்பல் இங்கிலாந்துக்குரிய மூழ்கடிக்கப்பட்டது. கப்பலிலிருந்த 10 உத்தியோகஸ்தரும் 107 மாலுமிகளும் மூழ்கி யிறந்தனர்.

சேர்மனிய கப்மரின்களின்நெய்கையால் கோர் வேமாலுமின்மாத்திரம் 1098 பேர் கொல்லப்பட்டனராம்.

பல்கலை.

ஐக்கியசேனை முன்சென்று வாட்டர்ரிவோரமாயுள்ள புகைரதப்பாதையைக் கைப்பற்றின. ஸ்ட்ரூமிட்சா வரைப் பிரித்தானிய வீரர் கைப்பற்றினர். வெலைரைச் சேர்வியசேனைகள் வைப்பற்றினர். அங்கிருந்த பல்கேரியசேனைகள்முழுதும் சிறைப்படுத்தப்பட்டார்கள். அவருடன்சேர்ந்து சண்டைசெய்த சேர்மனியரும் பிடிக்கப்பட்டார்கள். நிராரான பொருட்களும் கைவிலங்கிடப்பட்டன. பல்கேரியர் லிஸாட்டன் வரையில் சண்டைசெய்வதை நிறுத்தும்படிகேட்டனர். பல்கேரிய பிரதிநிதிகள் வெண்துவசமேந்தி சேரிஸ்தாமைக்கண்டி பேசவந்தால் அங்கீகரிப்போமென ஐக்கியசேனைத்தலைவர் தெரிவித்தார்.

பல்கேரியர் பாதாரு கிபர்ரையும் கிழக்கு ஸிபஅரசுகளிடஞ் சரணடைந்துவிட்டார்கள். பல்கேரிய புகைரதப்பாதைகளை ஐக்கியஅரசுகளுக்கு ஒப்புவித்துவிட்டார்கள்.

பல்கேரிய முதல்மந்திரி தேசத்துரோகமுறத்தில் விசாரிக்கப்படவேண்டுமென்று சேர்மனிய பத்திரிகைகளெழுதுகின்றன.

பல்கேரியர உடனடிப்கைக்குக் கையொப்பம் வைத்துவிட்டது. அவ்வுடன்படிக்கையில் பல்கேரியர் கிரேக்கிலும் சேர்வியாவிலும் தாங்கமையை பல்கேரியசேனையைக் கலைத்துவிடவும் பல்கேரிய அரசகுவசத்தில் ஆயுதங்களையும் ஐக்கியபடைகளுக்கு ஒப்புவிக்கவேண்டிய இடங்களைக் கைப்பற்றிக்கொள்ளவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருகிறது.

பல்கேரியஅரசர் தாம் இன்னும் சேர்மனிய ஆலிக்கிறார். கோபாரம்பாராட்டுவதாய்த் தெரிகேரியாவைநோக்கிச் செல்லுவதாயும் சமாச்சாரமெட்கின்றது.

பிரான்சிய சேர்வியசேனைகள் ஆஸ்திரியரை விரான்சர் என்றஇடத்தைக் கைப்பற்றி ஆபிரக்கணக்கான கிரையாளரையும் பிடித்தனர். டிப்பேனியாவில் பிராட்கேஸுடைக்கில் இத்தாலியவீரர் சரணடைந்துவிட்டனர்.

பல்கேரிய அரசரான பேரினுனட் பட்டத்தினின்று விலகிவிட்டார். 5உ முதல் பேரிஸ்லினவரர் பட்டத்தை வகித்தார். அவர் பல்ஸ்தார்.

பிரான்சிய சேர்வியதிருப்பகள் அல்பேனியாபாட்டங்களையும் திரானா யத்தனை உள்ளுக்கரத்துக்குப் போயின. அல்விடம் இனிமேல் சேர்விய தலைநகராயிருக்கும்.

பட்டத்தால்லிவிய பல்கேரியஅரசர் கோபர்க் என்றஇடத்துக்குச் சென்றார். அவ்விடத்திலேயே இனிஅவர் வாசஞ்செய்வர். பிரான்சிய சேர்வியா இத்தாலியசேனைகள் எல்பாசன் என்றநகரைக்கைப்பற்றினர். ஆஸ்திரியர் அவ்விடத்தைவிட்டுப்போயினர்.

ருசியா.

ருசியசர்ரேவர்த்தி லலேயுண்டபின் சக்கிரவர்த்தினியும் அரசநகுமாரனும் பிள்ளைகளும் ஏமின்பர்க்கிலிருந்து ஒர் கட்டுக்காவலான இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டது. ஆனால் நடிச்சாமத்தில் அவர்கள் காணமற்போனார்கள். காவற்காரருக்குக் கைக்கூலிகொடுத்து பூஸ்மலைச்சாரலில் ஒளித்துக்கொண்டிருப்பாரு நம்பப்படுகிறது. அவரைச் சோதனைசெய்கின்றன.

சென்ற காதுவருடங்களில் ருசியஅரிஞல்செய்துமுடிக்கப்பட்ட பல சண்டைக்கப்பல்களை அவர்கள் சேர்மனிக்குக் கொடுத்துவிட அவைகள் கருங்கடலையும் டார்டனல்லசலசந்தியையுங் காவலசெய்கின்றன.

பின்லந்தின் பார்லிமெந்துச்சபை சேர்மனிய சக்கிரவர்த்தியின் மாமனான பிரின்ஸ பிரதரிக்கார்ல் என்பவரைப் பின்லந்தின் அரசராய்த் தெரிவுசெய்தனர். சேர்மனிய ராசவம்சத்தாரொருவரைச் சட்டவிரோதமாய்ப் பின்லந்தின் அரசராகிக் கோசபந்தத்தை விலக்கிக்கொண்டது.

கைதியாக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களால் பிளாகோலெஸ்டச்சென்கத்துச் தப்பித்துக்கொண்டோன மொலஷிவிக் தலைவர்கள் மஸ்கோலியவழியாகப் பெர்லியவுக்குப்போக நினைத்தாயும் பொன்னும் இரசாமான்களும் கடவுலைமையிலிருகும் குடிகள்போல் பாஸ்போர்ட்டும் கொடுக்கப்பட்டதாகவும் நம்பிக்கையாய்த் தெரியவருகிறது.

சேர்மனி.

சேர்மனிய கிரேஷ்டமந்திரியாரும் பிறதேசகாரியமந்திரியாரும் தமது உத்தியோகங்களை இராசாமாக்கொடுத்துவிட்டனர்.

சமாதானம் உடனே செய்துகொள்ளவேண்டுமென்ற தனங்கள் கலகஞ்செய்தனர். தலைகளில் பேரியிடியால் 6 பேர் மாண்டனர்.

பிரின்ஸ்மாக்ஸ் என்ற இளவரசர் சேர்மனிய கிரேஷ்டமந்திரியாய் நியமிக்கப்பட்டார்.

சேர்மனிய லேலோஜுத்தசம்பந்தமாயும் கலகசம்பந்தமாயும் மறியல்செய்யப்பட்ட பலருக்குச் சக்கிரவர்த்தி மன்னிப்புக்கொடுத்துவிட்டார்.

சேர்மனியசக்கிரவர்த்தி இராச்சியபாரத்தைத் துறந்துவிட்டாரென்ற வதந்தி உறுதிப்படவில்லை.

17உ சென்ற 15உயில் சேர்மனியசக்கிரவர்த்தியின் வையோப்பத்தின்மேல் பிறந்திருக்கும் உத்தரவுகளால் அரசர் இராச்சியத்தை ஆண்டுவருகிறதாகத் தெரிகிறது. ஒருடத்தரவில் புத்தசட்டப்படி புத்தபகுதிலயச்சேர்ந்த தளவர்த்தர்கள்செய்யுந் தீர்மானங்களெல்லாம் சிவில்பகுதியிலுள்ள உத்தியோகஸ்தர்களாலது செய்யப்படவேண்டுமென்பது பிரதான தளவர்த்தர்பன்னுர தீர்மானம். சான்சலருடைய அபிப்பிராயத்தை ஒத்திருக்கவேண்டுமென்பது மற்றொரு உத்தரவு.

சமாதானவிஷயம்.

பிரசாதிபதி வில்சன்கூறிய நிபந்தனைகளைத் தாம் ஒப்புக்கொள்வதாய்ச் சேர்மனியஅரசு சுவிற்சலாந்து அரிஜனமூலமாய் அமிக்காவுக்குச் செய்தியனுப்பியது. அதற்குப் பிரசாதிபதி வில்சன் அவ்விஷயம் ஐக்கியஅரசுகளின் பொறுப்பில் முழுதும் விடப்படவேண்டுமென்றும் தற்காலம் ஐக்கியஅரசுகள் செயல்தானதிலிருப்பதாய் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும் தற்காலம் நீரிலும் நிலத்திலுஞ் செய்தவும் அத்திரமகளினிறத்தும்வரையில் சண்டையை நிறுத்தக்கூடாதென்றும் தெரிவித்தார். அதை ஒப்புக்கொண்டு சேர்மனி தாமும் ஆஸ்தியாவும் கைப்பற்றிய இடங்களை விட்டுவிட்டால அவ்விடங்களை ஒல்லாந்தசேனைகளிடம் விட்டுவிடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறதாம். சமாதானம் ஏற்படுவரையில் அவ்விடத்தில் ஒல்லாந்தசேனை நிற்கவேண்டுமென்று கேட்டிருக்கிறதாம். வருமானான சமாதானம் ஏற்படுமுன் கைப்பற்றியகோலை விடப்படாதென்று சேர்மனிய வனசர்வேடில் கட்டியார் வெளிப்பட்டிருக்கிறார்களாம்.

இந்தியா.

மதுரைமாவட்டம்—மதுரையில் மெஸ. வாதராசனுடாயுடுவின்மீது வந்திருக்கும் இராதாராகவமுக்குவன்சானை இன்னும் நடந்துகொண்டுவருகிறது. ஒருகாள் அவர் கச்சேரியிலிருந்து வீட்டுக்குப்போகும்போது சன்கள் கூட்டங்கூட வழியைத்தடுத்துக்கொண்டு கவிக்கொண்டிருந்தார்கள். வழியண்டாக்கிச் சனங்களை ஒதுக்குவதற்கு மதுரை ரிஸால் பொலீசர் முயற்சிசெய்தார்கள். அமளி அதிகமாயிருந்தமையால் அந்தப் பொலீசர் தம் கையிலிருந்த துப்பாக்கிகளாற் சுட்டார்கள். அவர்கள் சனங்களோடுகூடிய சுட்டார்களோ, அல்லது சனங்களை வெருட்டுவதற்குச் சுட்டார்களோ என்னுமவிஷயம் விசாரணையிலிருக்கிறது. இரண்டுமுன்றுபேர் துப்பாக்கிவெடியினால் இறந்துபோனார்கள்.

அன்பினுல்சேர்த்துஅலுவி—பம்பாயிலுள்ள ஹாக்கால் யந்திரசாலைக்குளத்தில் இவ்வாரமுதலில் கலாரம்பின் எனபவனுதாரவம் ஒருகொணியைபிற்கட்டி மிதக்கிறதென்று மாநகரிசாரித்தபோது மாநகரமென்னும் மாநிடம் இந்தக் காதாரம்பின் ராட்புக்கொண்டிருந்தானென்றும் அதே மாநிடம் மதுரைவேலர் என்பவனும் ராட்புக்கொண்டிருந்தானென்றும் ஒருநாள் கலாரபின்என்பவனுக்கும் மதுரைவேலர் என்பவனுக்கும் மாநாயின் கிரத்தில் சச்சரவுண்டாக மதுரைவேலர் என்பவன் கலாரம்பினின் கழுத்தைத்திருகொன்று கொணியைவிற்போட்டுக்கட்டி மேற்படியந்திரசாலைக் குளத்தில் எறிந்துவிட்டானென்று தெரியவந்தது. இதுபாடங்கையில் மாதரையென்னும் ஸ்திரியானவள் எவ்வித கூக்குரலுமிடவில்லையாம்.

மாற்றியெழுதப்பட்ட பத்திரம்—ஆனைமலை வென்னைதொரை ராவுத்தர்சம்பந்தமாற்றியெழுதப்பட்ட பத்திரம்இருந்தவென்ற அவர் கோவமுத்தூர் ஸெஷன் நீதிபதி முன்பாவிசாரணை செய்யப்பட்டிருக்கிறார். பொலீசர் சொல்லித்துப்பார்த்ததில் ஷே ராவுத்தரர் வசமிருந்த பிரமேரி சோட்டோன்றில் ரூபா 112 என்பது 712 என மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. இது விஷயமாக ராவுத்தர் சாட்சிகள் வாக்குமூலங் கொடுத்திருக்கிறார்கள். வழக்கு இன்னும்முடியவில்லை.

நீலர்த்திக்கொள்ளை—வடக்கு மலையானைச் சேர்ந்த நவேணுரில் சிலகொள்ளைக்காரர் அவ்வூரிலுள்ள தனிக்காரனமகமதியர் ஒருவரது கிருகத்தினுட்புகுந்து அவரையும் அவரது சமுசாரத்தையும் அவரது எசுபுத்திரனையும் கையிட்டுத்தொக்கம்மாகவும் ஆபரணங்களாவும் 20,000 ரூபாய்வரையில் குறையாடிச்சென்றார்கள், பதராவில லொலீஸ இன்ஸ்பெக்டர் கோபாலன் ஒரு வழக்கைவிசாரித்தபோது மூன்று மாபியோத்திருடர்களை 3000ரூபாபெறுமான கைகளுடன் பிடித்தார்.

சகல தொக்காரிஸ்மாருக்கும் ஊழியர்களுக்கும்

வசேஷ விளம்பரம்.

தொண்டமானுறை செல்வச்சந்நிதி கோவிலில் காலஞ்சென்றபோன ஆறுமுகம்முதலாக்குமருவுக்குரிய பாகமும் அவருக்குரிய மற்ற எல்லா ஆதனங்களும் மேற்படி கோவிலின் அன்னதானமடத்துக்குமிக சமீபமாக வடகிழக்கில் மேற்சொல்லிய முதலாக்குமாரு மகன் செல்லையாவுக்கும் அவரது மூன்று சகோதரிகளுக்கும் உரிய பொதுப்பொருள்கொண்டு 1917உ வருஷம் கார்த்திகை மாதத்துக்குமுன் (அதாவது செல்லையாவுடைய விவாகத்துக்குமுன்) கட்டிவிக்கப்பட்டிருக்கும் (மேற்கில் இரண்டு அறைகளும் மெழில்நிலை ரண்டுசாலைகளுமுள்ள) கல்வீடும் மேற்சொல்லிய செல்லையாவுக்கும் அவரது மூன்று சகோதரிகளுக்கும் பொதுவாயிருக்கிறபடியால் அவற்றைக்குநிதிதுந் தனக்குமாத்திரம் சொந்தமென்று ஆடுதறி அறுதி முதலிய எவ்வித சாதனத்தையும் பிறப்பிப்பதற்கு மேற்சொல்லிய செல்லையாவுக்கு யாதும் உரிமையில்லையென்று இதனமீழ்க்கையொப்பம் வைத்திருக்கும் அவருடைய சகோதரி பாக்கியத்தின் புருஷன் ஆறுமுகம் வேதாரணியமாகிய சகல சொத்தாரிஸ்மாருக்கும் ஊழியர்களுக்கும் இதனால் விளம்பரப்படுத்துகின்றேன் இனனும் செல்லையாவுடையதாயார் வேந்தராயிருக்கிறபோது வாக்குப்பிடி இப்போது செல்லையாவசம்மிருகும் ஒருசோடி எருதுமாடுகளும் அவருக்கும் அவரது சகோதரிகளுக்கும் பொதுவானபடியால் அவைகளை விற்பதற்கு உரிமையில்லையென்பதையுந் தெரிவிக்கின்றேன்.

மேற்சொல்லிய செல்லையானவர் தனது தாயார் கடினகோபாற்பீடிக்கப்பட்டு அறிவுமயக்கமுற்றிருந்த அந்நியகாலத்தில் அவரோலிருந்த (அவரது காலஞ்சென்ற சகோதரியும் எனது மூத்தகுமாரமுமாகிய சந்தனபிள்ளைக்கு வாக்குப்பணணப்பட்டு அவருடைய பிள்ளைக்குரியனவாயிருந்த) ஆதனங்களையெல்லாம் தான் குவாலலம்பூரரின்கீழ் உத்தியோகமாயிருந்தபோது இரகசியவஞ்சனையால் தன்பேருக்கு எழுதுவித்துக் கொண்டமையாலும் இன்னும் மற்ற ஆதனங்களையும் அபகரிக்க விரும்புவராய்க் காணப்படுவதாலும் இவ்விளம்பரத்தை நான் வெளியிடவேண்டியதவசியமாயிற்று.

இங்ஙனம்,

தொண்டமானுறை
21—8—18 } சி. ஆ. வேதநாயகம்.

பி. சுப்பரமணி அபூர்வ

ஆயுர்வேத அவுஷதங்கள்.

8 கர்ணபிரதா—காதில் சீல்வடிதல் வலி குடைச்சல் காதடைப்பு இரைச்சல் செவிடுதல் இவைகளைக் குணமாக்கும். செவி [illegible]

தக்கட்கும். சோ 1 லில அணு எட்டு வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சோக்கள்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

9 சர்வபலச்சம்காரன்—இப்பூ தடையின்றிக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஏயாதாமைச்சலைத்தரு வெகுசுறக்கில் மற்றுமிடங்களில் படரும் மேகப்படை சொரிகிரக்கு சப்பும்படை தேமல்முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சோ 1க்கு லிலஅணு நாலு வி பி செலவ ஒன்றுமுதல்பன்னிரண்டு நாலு மன்வரையிலனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

10 பேதிமாத்திரைகள்—வயிற்றில் வலி ஆயாசமில்லாமல் சுகமாய்ப்பேதியாகும். அரோணய பித்தபபத்திரவங்கள் சலவாயு மலச்சிக்கல் அக்கினிமாந்தம் வாதம் கைகால்முதலிய அவயங்களின் குடைச்சல் வலி சலசலரங்கள் முதலியவைகளைச் சொஸ்தப்படுத்தும். சோ 1க்கு அணு எட்டு. வி பி செலவு 1முதல் 6 சோக்கள்வரையில் அணு5 பிரத்தியேகம்

11.— ஜுவரசம்ஹாரி—நிரந்தரப்பட்டசுரங்கள், குளிர்சுரம், முறைசுரம், வாதசுரம் சாமாலை,பிடரிவலி,இடுப்புவலி, விலாவலி,முழங்கால்வலி, உடம்புவெறுப்பு, மயக்கம், தாகம் இரண்டாமுறைச்சுரம்,காலாமுறைச்சுரம்முதலிய சகல சுரங்களை அடியோடுபோக்கும், டப்பா 1-க்குஅணு 5 வி. பி. செலவு பிரத்தியேகம்

12. உரோமசம்ஹாரி—இச்சூரணத்தை மயிருள்ளவிடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர்கீக்கிவிடும்சோ 1-க்குஅணு 4.1முதல்6சோக்கள்வரையில்வி.பி. செலவுஅணு5 பிரத்தியேகம்

13. சுகந்தபல்பொடி—நல்லதிரணசக்தியைத் தரும். பல்வலி எக்காலத்திலும் வாராது.பல்எக்காலத்திலும்விழாது. சோ 1-க்கு விலஅணு3 வி.பி செலவு 1 முதல் 5 சோக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்,

14. ஸ்கலிதரக்ஷணி—பலவீனத்தாலும்,உஷ்ணத்தினாலும், சிற்றின்பத்தில் பாலியத்தில் தழைந்து மூழ்கியிருந்த சாரணத்தாலும், தாக்கத்திலும் சொப்பனத்திலும் இந்திரிய நட்டமாவதை நிற்பாட்டித் தேகஇடத்தைத்தரும். சோ 1-க்கு அணு 8. வி.பி, செலவு 1 முதல் 6 சோக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

15. உயர்ந்தகஸ்தூரி—மிகவும்சேர்த்தியான தம்முதல்தரமானதும் காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி கம்பிடத்தில் எப்போதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48 ஒருரூபாய்க்குக்குறையால் சில்லறையிலும்விற்கப்படும். வி. பி. செலவு பிரத்தியேகமாகும்.

16. தேள்கோட்டின்மருந்து—இம்மருந்தைவிஷந்தீண்டிய இடத்தில் தடவினால் தகுணமேவிஷமிறங்கி வருத்தப்பட்டுச் சுகிக்கமுடியாதவேதனையில்லின்றிவிரைவில் யாவரும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய்ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத்தரும். சிறும் சோ 1-க்கு அணு 8. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சோக்கள்வரையிலும் வி.பி.செலவு [illegible]

17. மேகரோகமருந்து—இதைவெள்ளிதுணில்தடவிரணங்களின்மேல்போட அரையாப்பு கண்டமாலை, வீப்புருகி, தொடைவாதை,செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அமுருளியன், பிளவை, சொர்தி, மேகவெடிப்பு, இலிங்கப்புண்ணு யோனிப்புற்று, முதலிய இரணங்கள் ஆறிச்சொஸ்தமாகும். விலை சோ 1-க்கு அணு 8. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 3 சோக்கள்வரை வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்,

18. கண்டகத்தியாத்திரைகள்—டைரஸ்னில் சொல்லிபடி இதைச் சாப்பிட்டவேந்தால் தொண்டைக்கட்டு,தொண்டைகம்மல் நீக்குமதல்றி இன்பமாய்ப் பாடுவதற்குஇசைந்த குரலையுந்தரும்.சங்கீதவிதான்களுக்கும் பிரசங்கஞ்செய்பவருக்கும் உபாத்தியாயர்களுக்கும்இது ஓர் அமையானஔஷதம், எத்தனைநேரம்பாடினாலும் நூசங்கித்தாலும் குரல் கம்மாது.இனிமையான பிசையைத்தரும். விலைசோ 1-க்கு அணு8, இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சோக்கள் வரையில் பார்சிக்கு தபால்முதலியசெலவு தனி அணு 5 பிரத்தியேகம்.

19 . ஈகத்தீஸ்நானப்பொடி— இந்த வாசனைப்பொடியைத் தினந்தோறும் தேகத்தில்தேய்த்து தனகாரகம்செய்துவந்தால் தேகத்திற்குச் சுகந்த பரிமளத்தைத்தந்து தேமல், அரிப்பு, சொறியில் ரெக்கு, கற்குழைகாற்றம், கைகால் எரிச்சல் மேகக்கங்கை, சரீரவாட்சி, கணக்குறி, வெப்பு, சுரப்பன், தலைவலி, பொரிமேகம், பரிதாப 9 வரை,மேகவறட்சி, ரெக்குமுதலிய இன்னோடு அனேகவிதரோகங்களுக்கு வியாதிகள் தீரும். நல்லவாசனையும் காந்தியும் லக்ஷ்மிகரமுமாகு ஆரோக்கியமுமுண்டாம், அறைவீட்டுக்குமுந்தைமுதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா-க்கு விலை அணு 8, வி. பி. செலவுஅணு 3 பிரத்தியேகம்!

20 சுத்தீவிமாத்திரைகள்—இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், காய்ச்சல், மயக்கம், வாந்தி, விஷதாரம், இரைவு, வயிற்றுப்பிரம், வயிற்றுவலி, தெற்குத்திக்கினை முதலியநோய்கள்தீரும். அனைத்துமுன்தைமுதல் யாவரும்உபயோகிக்கலாம். விலை சோ 1-க்கு அணு10 இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சோக்கள்வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணு 5 பிரத்தியேகம்.

21 சுகுமாரதைலா—இதைப்பிரதிதினமும்குறிதவிடத்தில்பூசிவந்தால் சோர்வுகரம்புகளின்தளர்ச்சிக்கிவிடுந்த வலிவுகொள்ளும் இழந்து போனசக்திமுற்றிலும்பெற்றுக்கொள்ளலாம் விலைசோ ஒன்றுக்குரூபா நூன்று வி பி செலவுஒன்றுமுதல் ஆறு சோக்கள்வரையில் அனுஐந்து பிரத்தியேகம்

22, காப்பனுக்கும்கொறிச்சிங்குக்கும்மருந்து—இம்மருந்தை டைரக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும்உபயோகித்தால்கொறிக்கொத்தில் எவ்வித நமைச்சல்களும், சொரி, சிரங்கு,வரட்சிசொறி, அனேக குழந்தைகளுக்கு தேகமெல்லாம்அல்லது சில பாகங்களில் கண்டு அதிக நமைச்சலையும், தொந்தரவையுமருளின்ற எல்லிதாரப்பாண்களையும், வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும் விலை சோ 1 அணு8இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி. பி. செலவு 1 அல்லது 2 சோக்கள்வரையில் அணு5 பிரத்தியேகம்,

23 கேசஸுவாசனி—உசிதமான வாசனைச் சாமான்கள் சேர்த்துச் செய்யப்பட்ட இத்தைலதிதால் கூந்தல் செழிப்பாகவும் கருக்கமாகவும் கறுப்பாகவும்வளரும், கண்கள் குளிரும், தலை நோய் போகும், மூளையைப்பலப்படுத்தும் மிகவும் வாசனையுள்ள தைலம் சோஒன்றுக்கு ரூபா 1 வி பி செலவு ஒன்றுஅல்லது இரண்டு வரையிலனுப்ப 5 அணு பிரத்தியேகம்,

எனது விலாசம்

பி. சுப்பராய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

MY ADDRES
P. SUBBRAOY
Ayurvedic Pharmy
Sri Venkedasa
Perumal Koil
Sannathy
Tanjore

கடல் நுரை தேவை.

வியாபாரிகள் விலைவிபரத்துடன் இதனடியில் கண்டவருக்கெழுதவும்.

தி. இரத்தினபின்னை.
2131 தாயார்சாய்ப்புவீதி
செட்டிதோட்டம், மவுண்ரோட்டு சென்னை.

பம்பாய் இமிடேஷன் பட்டுப்புடவைகள்.

16 முழம் நீளம் 46 இஞ்சு அகலம். இது பார்வைக்குவெகுநேர்த்தியாயும் தற்காலநாகரீகத்தின்மாதிரியாயும் உடுத்துபவர்களுக்கு உற்சாகத்தைத் தரக்கூடியதாயுமிருக்கும். இதில் பலவித பூக்களும் புட்டாக்களும்போட்டு வெகு அழகாயிருக்கும், இதைத் துவைத்தும் சலவைசெய்தும் கட்டலாம். ஒருமுறை வாங்கிப்பார்த்தால் உண்மை விளங்கும். புடவை 1-க்கு ரூபா 5—8—0. ஒரே தடவையில் 4 புடவைகள் வாங்கினால் வி. பி. சார்ஜு இனாம். பிரியமான வர்ணங்களில் அனுப்பப்படும்.

மதுரை புட்டா சேலை.

18 முழம் நீளம் 2 முழம் அகலமுள்ளது. சாயத்திற்கு உத்தரவாதம். அதில்அனேக நிறமான புட்டாக்கள்போட்ட பல ரகங்களுண்டு. ஒவ்வொருசேலை வாங்குவோர்க்கும் எலெக்டரிக் பொல்சோ நிரம் ஒவ்வொன்று பரிசு அளிக்கப்படும்.

விலை ரூபா 3—12—0
பாலாமணி மாங்காய்சேலை விலை ரூபா 3—8—0
பகதர் தலனக்கொடிசேலை விலை ரூபா 3—4—0
சகுந்தலா இமிடேஷன்பட்டுப்புடவை ரூ.5—8—0
நாசாபுரம் சரிகைசேலை ரூ.4—8—0
ஹோம் ரூல் சேலை ரூ. 12—0—0

நற்போது 100-க்கு 25 வீதம் கூட.

சி. சி. லிங்கம் & கம்பெனி.
சௌகார்பேட்டை மதராஸ்.

Veritable! Kind!! Permutable!!

Rs. 2.0.0 will bring you one goldcoloured framed SPECTACLE. For every order 4 spectcles will be sent and you are requested to select one. Please return the three spectacles after your selection.

Dont miss this golden opportunity.

Apply— SANDOW WATCH & Co
Sowoarpet, Madras.

சாண்டோ வாச்சு கம்பெனி
சௌகார்பேட்டை மதராஸ்.

SENSATIONAL DISCOVERY,
OF AMERICA.
ELECTRIC SOLUTION

Specific for:—
General Debility.
Loss of Manhood.
Nervous Debility.
Rheumatism.
Dyspepsia.
Costiveness.
Loss of Appetite.
Piles.
Paralysis.
Gonorrhea.
Diabetes.

Blends, or concentrates Electric Current, the want or superfluity of which in the human constitution causes all sort of diseases, it acts like a charm where Allopathic, Homoeopathic, Bakimai or Ayurvedic medicines totally failed.

Price— 1 Phial for a month's use Rs. 1/—Postage up to 3 phials As. 6. Foreign Postage up to 3 phials Rs. 1/—

Sole Agent: Dr. D. D. HAZRA
Fatehpur, Garden-Reach P. O.
CALCUTTA

ஆசியாவின் இரண்டு சுகந்தங்கள் எவை?

Otto Mohini

ஓடோமோகினி.

இரண்டு அல்லது மூன்றுதுளிகள் கைகுட்டையில் தெளித்தால் நறுமணம் பொருந்து பூக்தோட்டத்திலிருந்தாற்போல் மனதிற்கு உல்லாசத்தை யுண்டாக்குகின்றது.

Rohini Oil

ரோபினி ஆயில்.

இவ்விரண்டையும் மறவாதேயுங்கள். இத்தைலம் ஸ்திரீகளின் கூந்தலைக் கறுப்பாயும் பட்டுப்போல் மிருதுவாயும் நீண்டு வளரச்செய்து ஸ்திரீகளின் முகத்திற்கு அழகைத் தருகின்றது.

ஓடோமோகினி	½ அவுன்ஸ்	ரூபா	2 - 4—0
"	1 டிராம்	ரூபா	1—0—0
"	கார்டுகள் டஜன்	ரூபா	0—12—0
ரோபினியா ஆயில்	சோ	ரூபா	1—0—0

ஓடோமோஹினிடிபோ,
94 சீபைஜார், மதுரை.

எங்கும் கீர்த்திபெற்ற

பி. எஸ். வாரியரின் ஆர்ய வைத்யசாலை.

கோட்டக்கல் S. மலபார். (இந்தியா)

ஸகல வைத்யர்களுக்கும் நோயாளிகளுக்கும் தேவையான எல்லா ஔஷதங்களையும் மலையாளம் ஆயுர்வேத சாஸ்திரமுறைப்படி தயார்செய்து எப்பொழுதும் ஸமரமான விலைக்குக்கொடுத்துவருகிற வைத்யசாலை தென்னிந்தியாவில் இஃதொன்றுதான் மிகவும் பேர்போனது.

ஏழைகளுக்கு காலை 7—மணிமுதல் 9—மணிவரையில் தர்ம வைத்யம் செய்யப்படும். இங்குவரும் வியாதிஸ்தர்களை தேக பரிசோதனை செய்து சொல்ப விலைக்கு மருந்துகள் கொடுப்பதோடு இங்கிடத்திலேயே இருந்து தெய்லை செய்துகொள்ளவேண்டிய எல்லா ஏற்பாடுகளுஞ் சௌகரியமாகச் செய்துகொடுக்கப்படும்.

வெளியூரிலுள்ளவர்கள் தத்தம் ரோகங்களை விபரமாக எம்மெழுதிக்கொண்டால் தகுந்த ஔஷதங்கள் நிச்சயித்து உபயோகிக்கக் கிரமங்களுடன் வி. பி. மூலமாயனுப்பப்படும். கடிதங்களையெல்லாம் ரகஸ்யமாகவே வைத்துக்கொள்ளப்படும்.

சில முக்யமான ஔஷதங்கள்.

க்ஷீரபலா தைலம்:—எல்லா வாதரோகங்களையும் குணப்படுத்தும். 101 முறை காய்ச்சினது அவுன்ஸ 1-க்கு ரூ. 3—0-0.

கல்தூரி மாத்திரை:—இருமல், க்ஷயம், மூர்ச்சையாகுதல், சுர்ப்பவலி, வாயு உபத்திரவம், விலாப்பக்கம் நோக்காடு, மூச்சு திணருதல், சுக்பிரத ஜ்வரம் இவைகளைக் கண்டிக்கும். டஜன் 1—க்கு ரூ. 0-12-0.

மதனகாமேஸ்வர லேகியம்:—தாதுபுஷ்டியை யுண்டுபண்ணுவதில் மிகவும் பேர்போனது. 40 ரூபாயிடைபவுண்டு 1—க்கு ரூ. 7-8-0.

சாரிபாரஸிம்:—புஷ்டியுண்டாக்கி சரீரத்துக்கு குளிர்ச்சியைக்கொடுத்து ரத்தசுத்திசெய்யும் உயர்ந்த நன்னாரி ஸெஸன்ஸ். 4 அவுன்ஸ சோ 1—க்கு ரூ. 1—7—0.

சுகுமார க்ஷாயம்:—இது முக்கியமாய் ஸ்திரீகளுக்கு மாதவிடாய்காலங்களிலுண்டாகும் பொறுக்கமுடியாத வயிற்றுவலி ரத்தகுன்மம்முதலான எல்லா கோளாறுகளையும் நிவிர்த்திசெய்து ஸந்தானபாக்கியமடையும்படிசெய்யும். சோ 1—க்கு ரூ. 3—0—0.

தன்வந்திரிகஷாயம்:—கைலவிதமான வாதரோகங்களுக்கும் பிரஸவித்த ஸ்திரீகளுக்கும் மேலானகுணத்தைச்செய்யும். சோ 1—க்கு ரூ. 3—0—0.

விஷூசிகாரிதவிகை:—காலரா (வாந்திபேதி) என்னும் கொடியவியாதியை சீக்கிரம் கண்டித்துவிடும். டஜன் 1—க்கு ரூ—0—12—0

நாலிகாதூரணம்:—ஜலதோஷம், பீனிசம், சிரோபாரம், நாஸரோகம் முதலான கழுத்துக்குமேலுண்டாகும் வியாதிகளை சொஸ்தியப்படுத்தும். சோ 1—க்கு ரூ—0—5—0, 40 ரூபாயிடைரூத்தல் 1—க்கு ரூ. 7—8—0.

ஸ்வர்ணத்திராவகம்.—இது பத்தரைமாற்றுள்ள தங்கத்தினாலுண்டாக்கப்பட்டது. சகுமாரோகம், பக்ஷவாதம், பலவீனம், தாதுபலமில்லாமை, அக்கினிமாந்தியம் முதலானவைகளுக்கு ஆச்சரியமான குணத்தைச்செய்யும். 1 அவுன்ஸ் சோ 1—க்கு ரூ. 8—0—0.

சாதுர்ஜாதாஸாயனம்:—பலவாரணங்களினாலுண்டாகும் இந்திரியநாடம், பலவீனம், கைகால்அசைதி, ஜுரச்சல், அஜீர்ணம், வயிற்றுவலி, சிரார்ணி முதலானவைகளைப்போக்கி தாதுஷ்டியையும் சுகாறுபோகங்களுக்கு இன்பத்தையுமுண்டாக்கும். 40 ரூபாயிடைரூத்தல் 1-க்கு ரூ. 12—0—0.

இன்னும் அநேகவித ஔஷதங்களும் விற்பனைக்குத் தயாராகவிருக்கின்றன. விலை ஜாபிதா வேண்டியவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர் ஆர்ய வைத்யசாலை.
கோட்டக்கல், மலபார். [இந்தியா]

Printed and published by S.Tambimuttupillai at his Atchuvaly Gnanapragasa Yanthira office, Atchuvaly, Jaffna.